DINAMALAR 17 AUG 09

# திருப்பூருக்கு பசுமை குடைபிடிக்க 25 ஆயிரம் மரக்கன்றுகள்

திருப்பூர், ஆக. 17-

பசுமை திருப்பூர் இயக்கம் சார்பில் திருப்பூர் மாநகர பகுதிகளில் 25 ஆயிரம் மரக்கன்றுகள் நடப்படுகின்றன. மரம் நடுவிழாவில், துணை முதல்வர் ஸ்டாலின் மற்றும் ஈஷா பவுண்டேஷன் குருநாதர் சத்குரு ஆகியோர் பங்கேற்கின்றனர்.

ஈஷா பவுண்டேஷன் சார்பில் பசுமைக்கரங்கள் திட்டம் கடந்த 2004ம் ஆண்டு முதல் செயல்படுத்தப்படுகிறது. சுற்றுப்புற சூழல் மேம்பாட்டிற்காக மரக்கன்றுகளை நட்டு பசுமை புரட்சியை ஏற்படுத்த, 11.4 கோடிமரங்களை நட்டு வளர்ப்பதன் மூலம் தேசிய கொள்கையான, 33 சதவீத பசுமை பரப்பை உருவாக்குவதில் தீவிரம் காட்டி வருகிறது.

கடந்த 2006ம் ஆண்டில், இரண்டு லட்சத்து 56 ஆயிரத்து 289 பேர் பங்களிப்புடன் எட்டு லட்சத்து 52 ஆயிரத்து 587 மரங்களை நட்டு வளர்த்தது, கின்னஸ் சாதனையில் இடம்பெற்றுள்ளது. இதுநாள் வரை, 20 லட்சம் மக்கள் பங்களிப்புடன் 71 லட்சத்துக்கும் அதிகமான மரக்கன்றுகளை தமிழகம் முழுவதும் நட்டு வளர்க்கப்பட்டுள்ளது. நடப்படும் மரக்கன்றுகளை பராமரித்து வளர்ப்பதற்காக பராமரிப்பு பணியாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

திருப்பூர் பின்னலாடை நிறுவன உரிமையாளர்கள், அரசு துறை அலுவலர்கள், பணியாளர்கள், வர்த்தக குழுக்கள், மாணவர்கள், அரசு சாரா அமைப்புகள், சமூக நிறுவனங்கள், ஊடகங்கள் மற்றும் முக்கிய பிரமுகர்களின் பங்களிப்புடன், திருப்பூர் மாநகரில் மட்டும் 25 ஆயிரம் மரக்கன்றுகளை நட்டு வளர்க்க திட்டமிடப்பட்டுள்ளது.

வீடுகள், கல்வி நிறுவனங்கள், அரசு அலுவலகங்கள், தொழிற்சாலைகள், நொய்யல் ஆற்றங்கரை, தெருக்கள், சாலையோரங்கள் மற்றும் நகரத்தின் இதர பாதுகாக்கப்பட்ட இடங்களில், மரங்கள் நடப்படுகின்றன.ஒரே நாளில் நடப்படும் மரக்கன்றுகள், தொடர்ந்து மூன்று ஆண்டுகள் பராமரித்து வளர்க்கப்படும்.

திருப்பூர் டவுன் ஹால் வளாகத்தில், வரும் 19ம் தேதி முதல் 23ம் தேதி வரை, சுற்றுப்புறச்சூழல் கண்காட்சி மற்றும் பேரணிகள் நடத்தப்படுகின்றன. வரும் 23ம் தேதி காலை 6.00 மணிமுதல் மாலை 6.00 மணி வரை மரக்கன்றுகள் நடப்படுகின்றன. காலை 8.30 மணிக்கு பசுமை மாரத்தான் (ஓட்ட பந்தயம்) ஓட்டம் நடக்கிறது; நடிகை ஸ்ரேயா துவக்கி வைக்கிறார்.

மரக்கன்றுகள் முழுவதும் நடப்பட்டு, நிறைவு விழாவானது திருப்பூர் குமரன் கல்லூரியில் நடக்கிறது. விழாவில், துணை முதல்வர் ஸ்டாலின் சிறப்பு விருந்தினராக பங்கேற்கிறார். ஈஷா பவுண்டேஷன் அமைப்பு நிறுவனர் சத்குரு ஜகி வாசுதேவ் சிறப்புரையாற்றுகிறார்.

திருப்பூர் பகுதிகளில் நடப்பட உள்ள 20 வகையான 25 ஆயிரம் மரக்கன்றுகள், ஈஷா பயிர் காப்பகங்களில் இருந்து வரவழைக்கப்பட்டு, திருப்பூர் காந்தி நகர் பகுதியில் பராமரிக்கப்படுகிறது.